விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 31 வியாழன் 16.09.2021 மலர் - 2, இதழ் - 163

# ஆயுள் தண்டனை கைதிகள் விடுதலை



விஜயபாரதம்

ஆப்கான் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட கேரளாவைச் சேர்ந்த 25 ஐ.எஸ்.ஐ.எஸ் ஆதரவாளர்கள் மீண்டும் பாரதத்திற்குள் நுழைய வாய்ப்புள்ளது. அவர்களால் பாரதத்திற்கு ஆபத்து இருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த சூழலில்,அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15ம் தேதி 700 ஆயுள் தண்டனை சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட உள்ளனர். இதுகுறித்து விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தது சற்றே சிந்திக்கத்தக்கது.

தமிழகத்தில் 700 ஆயுள் தண்டனை கைதிகளை விடுவிக்கும் முடிவு மிகவும் ஆபத்தானது. அது தமிழகத்திற்கு மட்டுமல்ல, பாரதத்தின் பாதுகாப்பிற்கே ஆபத்தானது. இந்நிலையில் எஸ்.டி.பி.ஐ.கட்சி உட்பட பல முஸ்லிம் கட்சிகளும் அமைப்புகளும் அனைத்து ஆயுள் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என ஸ்டாலினுக்கு கோரிக்கை வைத்துள்ளது.

இவர்களுக்கு ஆயுள் தண்டனை எதற்காக வழங்கப்பட்டது, பல ஆண்டுகள் பல நீதிமன்றங்களில் தீர விசாரித்துதானே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது? இவர்களை ஒட்டு மொத்தமாக எந்த விசாரணையும் இன்றி ஒரே நாளில் விடுவிக்க ஒரு மாநில முதல்வருக்கு சட்டம் ஏன் உரிமை கொடுக்க வேண்டும்? அப்படியெனில் நீதிமன்றங்கள் எதற்கு?

மத ரீதியாக திட்டம்போட்டு பல அப்பாவி மக்களை குண்டு வீசி கொன்றவர்கள், அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி, அவரது பாதுகாவலர்கள், அப்பாவி பொதுமக்கள் என பலரையும் திட்டம் போட்டு மனித வெடிகுண்டை வைத்து கொன்றவர்களை எல்லாம் வெளியில் விட்டால் ஆபத்து என்பது முதல்வருக்குத் தெரியாதா? சட்டம் ஒழுங்கை காக்க வேண்டிய முதல்வர், சட்டம் ஒழுங்கு சீர்கெட செயல்படுவது முறையா?

ஒரு தலைவர் பிறந்தநாளில் பிற மனிதர்களுக்கு, பிற உயிர்களுக்கு, தேசத்திற்கு நன்மை செய்பவர்களை பாராட்டி பரிசளித்து ஊக்குவித்தால் அது பலருக்கும் உத்வேகம் அளிக்கும். அதைவிடுத்து ஈவு இரக்கமின்றி, பலரை கொடூரமாக கொலை செய்து, அவர்கள் குடும்பத்தை நடுத்தெருவில் நிறுத்தியவர்களை விடுப்பது எந்த வகையில் நியாயம்? இதுதான் சமூக நீதியா?

பாரதத்தின் பல பகுதிகளில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி பயங்கரவாதிகளை அடக்கிய ஒருவரை தமிழகத்திற்கு ஆளுனராக மத்திய அரசு அனுப்புகிறது என்றால், அது தி.மு.க அரசின் இதுபோன்ற செயல்பாடுகள் காரணமாகத்தான் இருக்கும் என்பது திண்ணம்.

# தி.மு.க.வில் அதிருப்தி அலை



விஜயபாரதம்

தமிழகத்தில் காலியாக உள்ள இரண்டு மாநிலங்களவை இடங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. தி.மு.க., சார்பில், மருத்துவ அணி மாநில நிர்வாகி கனிமொழி என்.வி.என்.சோமு, நாமக்கல் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ராஜேஷ்குமார் இதற்காக அறிவிக்கப்பட்டுள்ளனர். கனிமொழி என்.வி.என்.சோமு மறைந்த என்.வி.என். சோமுவின் மகள். முதல்வர் ஸ்டாலின் மகன் உதயநிதியின் பரிந்துரையில் வந்தவர் ராஜேஷ்குமார். தகுதி வாய்ந்த வேட்பாளர்கள் பலர் இருக்கையில் அரசியலில் அதிகம் ஈடுபடாதவர்கள், அதிகம் மக்களால் அறியப்படாதவர்களான இவர்கள் இருவரையும் தி.மு.க தலைமை அறிவித்திருப்பது தி.மு.க.,வில் வாரிசுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது என்பதையே காட்டுகிறது. உள்ளூரிலேயே அரசியலில் அதிகம் ஈடுபடாதவர்கள் மக்களவையில் என்ன பேசுவார்கள்? இனி கட்சி பதவி, எம்.எல்.ஏ, எம்.பி சீட் எல்லாம் உதயநிதியின் பின்னால் செல்பவருக்குத்தான் கிடைக்கும் என்றால், கட்சிக்காக, உழைத்து வரும் தொண்டர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் என்ன பலன். இது கட்சியில் கோஷ்டி பூசலை மேலும் அதிகரிக்கவே வழி செய்யும். மேலும், வன்னியர், நாயுடு, நாடார், தேவேந்திரகுலவேளாளர், உள்ளிட்ட மற்ற சமுதாயத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்படுவதில்லை என கட்சியின் மூத்த நிர்வாகிகள் புலம்புகின்றனர்.

# நீட் ரோல் மாடல்




விஜயபாரதம்

நடந்து முடிந்த நீட் நுழைவு தேர்வில், தேர்வு எழுத வயது ஒரு தடை அல்ல என்பதால், 63 வயது நிறைந்த முனுசாமி என்ற அரசு பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியரும் சென்னை வடபழநியை சேர்ந்த 47 வயதான ஜிம் உரிமையாளர் மோகன் என்பவரும் தேர்வில் பங்கேற்று தேர்வெழுதி உள்ளனர். முனுசாமி, டி.என்.பி.எஸ்.சி., குரூப் 4 தேர்வில் தேர்ச்சி பெற்று, கவர்னர் மாளிகையில் சுருக்கெழுத்தராக பணியாற்றி பிறகு காவல்துறையில் துறையில் நேரடி துணை ஆய்வாளர் தேர்வில் பங்கேற்று தேர்வாகி, நான்கு ஆண்டுகள் பணியாற்றியவர். பிறகு அதில் இருந்து கல்வித் துறைக்கு மாறி முதுநிலை ஆசிரியராக தேர்வாகி, செங்கல்பட்டு, பொலம்பாக்கம் பள்ளி, சென்னை அசோக் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றியவர். வடமாநிலங்களில் அப்பாவும், மகளும் நீட் தேர்வு எழுதி பேர்வு பெற்று ஒரே கல்லூரியில் எம்.பி.பி.எஸ் படிக்கின்றனர் என கூறியுள்ளார் முனுசாமி. மோகன், தன் மகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக தானும் படித்தவர், நம்பிக்கை காரணமாக தானும் நீட் தேர்வை எழுதியுள்ளார். நீட் தேர்வை கண்டு அச்சப்பட்டு தற்கொலை போன்ற கோழைத்தனமான முடிவுகளை எடுத்து வாழ்வை வீணாக்கிக்கொள்ளும் மாணவர்களுக்கு இவர்களை போன்றவர்கள் நிச்சயம் ரோல்மாடல்கள்தான்.

# மதம் மாறும் கிறிஸ்தவர்கள்




விஜயபாரதம்

கேரள அரசின் www.gazette.kerala.gov.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களின்படி, கேரளாவில் வாழும் பட்டியலினத்தவர்கள் பலர் கிறிஸ்தவ மத்த்தில் இருந்து வெளியேறி வருகின்றனர் என தெரியவந்துள்ளது. கேரள அரசால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, ஜனவரி 2021 முதல் ஜூன் 2021 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 211 கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தை விட்டு வெளியேறினர். அவர்களில் 166 பேர் ஹிந்து மதத்தில் இணைந்தனர். 45 பேர் முஸ்லிமாக மதம் மாறினர். அதே நேரத்தில் 15 முஸ்லீம்களும் தங்கள் மதத்தை விட்டு ஹிந்து மதத்தில் சேர்ந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பலிதான் திவஸ்



விஜயபாரதம்

செப்டம்பர் 13 1990 அன்று நள்ளிரவு ஸ்ரீநகரில் உள்ள ஹப்பா கடல் என்ற பகுதியில் வாழ்ந்த காஷ்மீர் பண்டிட் திகா லால் தப்லூ என்பவரை அவரது இல்லத்தில் முஸ்லிம் பயங்கரவாதிகள் கொன்றனர். அங்கு முஸ்லிம்களால் நடத்தப்பட்ட ஹிந்து இன அழிப்பு கோரத் தாண்டவத்தில் கொல்லப்பட்ட முதல் காஷ்மீர் பண்டிட் திகா லால் தப்லூ. அவரின் நினைவு தினம் செப்டம்பர் 14ஐ, ஒட்டி, அந்த கோரத்தாக்குதலில் பலியான ஹிந்துக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக 'பலிதான் திவஸ்' காஷ்மீரில் அனுசரிக்கப்படுகிறது. அவ்வகையில், காஷ்மீரில் பா.ஜ.க உறுப்பினர்கள் பயங்கரவாத தாக்குதலின் போது கொல்லப்பட்ட ஹிந்துக்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அவரது வீட்டின் நினைவிடத்திலும், அனந்த்நாகில் உள்ள பா.ஜ.க அலுவலகத்திலும் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வையொட்டி, ஸ்ரீநகரின் ஷீதல்நாத் கோயிலிலும் மக்கள் திரண்டு இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடைய வழிபாடு நடத்தினர்.

# உலோகத்தில் மோடி சிலை



விஜயபாரதம்

ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்த சிற்ப கலைஞர் வெங்கடேஷ்வர ராவ், அவரது மகன் ரவி இணைந்து ஆட்டோமொபைல் நிறுவனங்களில் இருந்து வீசப்பட்ட பயன்படாத உலோகங்களை ஒரு டன் அளவுக்கு சேகரித்து அதைக் கொண்டு நமது பாரத பிரதமர் நரேந்திர மோடியின் 14 அடி உயர சிலையை வடிவமைத்துள்ளனர். இந்த சிலையை செய்ய பத்து பேர் தேவைபட்டதாகவும், 600 மணி நேரத்தில் சிலை செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இந்த கலைஞர்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பும் பாராட்டும் குவிந்து வருகிறது. இச்சிலை தற்போது இணையத்தில் பரபரப்பாக பகிரப்பட்டு வருகிறது.

# பிட் இந்தியா இலவச பதிவு



விஜயபாரதம்

பள்ளி மாணவர்களிடையே உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு விழிப்புணர்வை அதிகரிக்க செய்ய, பிரதமர் மோடி யோசனையில் உருவான ஒன்றுதான் ‘பிட் இந்தியா வினாடி வினா’ நிகழ்ச்சி. பிட் இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக இது துவங்கப்பட்டது. இதில் 1 லட்சம் பள்ளிகளால் பரிந்துரைக்கப்பட்ட முதல் 2 லட்சம் மாணவர்கள், இப்போது நாடு தழுவிய இந்த வினாடி வினா நிகழ்ச்சிக்கு இலவசமாக பதிவு செய்யலாம் என்று அறிவித்துள்ளது இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம். இந்த வினாடி வினாவில் நாட்டின் ஒவ்வொரு மாநிலம், யூனியன் பிரதேசத்தில் இருந்தும் பிரதிநிதித்துவம் இருக்கும். ஒவ்வொரு பள்ளியும் இந்த வினாடி வினாவிற்கு அதிகபட்சம் 2 மாணவர்களை இலவசமாக பரிந்துரைக்கலாம். பிட் இந்தியா வினாடி வினாவில் பங்கேற்பதற்கான விவரங்களை அறிய https://fitindia.gov.in/fitindiaquiz என்ற இணையதளத்தை அணுகலாம்.

# மொரிஷியஸ் வாங்கிய டோர்னியர்


விஜயபாரதம்

நமது ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் லிமிடெட் நிறுவனம் தயாரித்த டோர்னியர் 228 ரக விமானம் ஒன்றை மொரிஷியஸ் வாங்கி உள்ளது மேலும் ஒன்றை குத்தகைக்கு எடுத்துள்ளது. கடந்த திங்கட்கிழமை அன்று பாரதம் அந்த விமானத்தை இந்திய பெருங்கடல் பிராந்திய நாடுகளுடனான நட்புறவை மேம்படுத்துவதற்கான சாகர் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒப்படைத்தது. இது குறித்து டுவிட்டரில் பதிவிட்ட மொரிஷியஸ் இந்திய தூதரகம், லைன் ஆப் க்ரெடிட் திட்டத்தின் அடிப்படையில் விமானம் வழங்கப்பட்டது. இது இருநாடுகள் இடையேயான கடல்சார் ஒத்துழைப்பை அதிகரிக்கும் என தெரிவித்தது. முன்னதாக, பிலிப்பைன்ஸ் அரசும் தனது கடலோர காவல்படைக்கு தமது துருவ் மற்றும் டோர்னியர் விமானங்களை வாங்க ஆர்வம் காட்டி வருகிறது.

# திரிபுரா முதல்வர் பேச்சு


விஜயபாரதம்

திரிபுராவில் ‘வளர்ச்சிக்கான அணிவகுப்பு’ என்ற பா.ஜ.கவின் பேரணி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அம்மாநில முதல்வர் பிப்லாப் தேவ், ‘திரிபுராவை ஆண்ட கம்யூனிஸ்ட்டுகள் திரிபுராவின் வளர்ச்சிக்காக எதையுமே செய்யவில்லை. அதன் தலைவர் மாணிக் சர்க்கார், 20 ஆண்டுகளாக மாநில முதல்வராக இருந்தார். அவரின் மற்றொரு முகத்தை பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன். சர்காரும் அவரது கட்சியினரும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அவதூறு செய்யவும் தன்பூரில் வன்முறையைத் தூண்டவும் திட்டமிட்டனர். ஆனால், பா.ஜ.க ஒருபோதும் ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் என பாகுபாடு பார்ப்பதில்லை. நாங்கள் அந்த தவறை ஒருபோதும் செய்வதில்லை. முந்தைய இடதுசாரி அரசின் ஆதரவில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நூற்றுக்கணக்கான பா.ஜ.க தொண்டர்கள் கொல்லப்பட்டனர். நமது அரசு 7 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்கியுள்ளது’ என தெரிவித்தார்.

# இடதுசாரி பயங்கரவாதி கைது



விஜயபாரதம்

நமது பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான பல பெரிய பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்ட மோதி ராம் என்ற இடதுசாரி மாவோயிஸ்ட் பயங்கரவாதியை, மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சி.ஆர்.பி.எப்), சிறப்பு அதிரடிப்படை (எஸ்.டி.எப்), மாவட்ட காவல்துறையின் கூட்டுக் குழு பிஜப்பூர் மாவட்டத்தின் படேல்பாரா மற்றும் கோல்குண்டா கிராமங்களுக்கு இடையே கைது செய்தது. இந்த கைது நடவடிக்கை பெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது. முன்னதாக, இவரை பற்றி தகவல் தருபவர்களுக்கு 8 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டு இருந்தது. இடதுசாரி மாவோயிஸ்டுகளின் சக்திவாய்ந்த பட்டாலியன்களில் ஒன்றன பி.எல்.ஜி.ஏ 1 பிரிவின் உறுப்பினரான இந்த பயங்கரவாதி, தன் கூட்டாளிகளுடன் 2010ல் டாட்மெட்லா கிராமத்திற்கு அருகே பாதுகாப்புப் படை வீரர்கள் மீது நடத்திய தாக்குதலில் 76 வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். 2017 புர்கபாலில் நடத்திய தாக்குதலில் 25 சி.ஆர்.பி.எப் வீரர்கள் வீரமரணம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் ஜிஹாத்



விஜயபாரதம்

கேரளாவில் சமீபத்தில் ஒரு பாதிரி, போதைப்பொருள் ஜிஹாத் குறித்து தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை உருவாக்கியது. இந்த சூழலில், தற்போது முஸ்லிம்கள் தங்கள் போதைப்பொருள் ஜிஹாத் தொழிலில் முஸ்லீம் அல்லாதவர்களை சேர்க்க முயற்சிக்கின்றனர் என்ற கருத்தும் வலுப்பெற்று வருகிறது. சில நாட்களுக்கு முன், பெங்களூரிலிருந்து போதைப்பொருட்களை கடத்திவந்த நௌஷத், ஸ்ருதி, யது ஆகிய மூன்று போதைப்பொருள் விற்பனையாளர்கள் கேரள கர்நாடக எல்லையில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ரூ.10 லட்சம் மதிப்புள்ள எம்.டி.எம் ஏ வகை போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. யது, ஸ்ருதி இருவரும் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு ஐ.டி பூங்காவில் பணிபுரிகின்றனர். இதேபோல, கொச்சியில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள எல்.எஸ்.டி, எம்.டி.எம் ஏ வகை போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. முகமது அஜ்மல், பைசல் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டனர். இவை சென்னையில் இருந்து கொண்டு வரப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

# ஹிந்துக்கள் மீது இனவெறி தாக்குதல்




விஜயபாரதம்

கனடாவில் கடந்த செப்டம்பர் 11 அன்று, ஹிந்து குடும்பத்தினர் கனடாவின் மிசிசாகா நகரில் உள்ள ஸ்ட்ரீட்ஸ்வில் பூங்காவில் மாலை 5:30 மணியளவில் ஒரு சிறிய மத விழாவை நடத்திக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இரண்டு இளைஞர்கள் அவர்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். அந்த ஹிந்து குடும்பத்தினர் தப்பித்து ஓடி காரில் சென்றபோதும் விடாது துரத்தி காரின் மீது கற்களை எறிந்து காரை சேதப்படுத்தினர். இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட அந்த குடும்பத்தலைவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அவரது மனைவி, இரண்டு குழந்தைகள் காயமின்றி தப்பினர். கனடாவில் இந்துக்கள் வெறுப்பு குற்றங்களை எதிர்கொள்வது இது முதல் முறை அல்ல. பாரதத்தில் விவசாய போராட்டங்கள் ஆரம்பித்ததில் இருந்து, அங்கு ஹிந்துக்களுக்கு எதிரான குற்றங்கள் பதிவாகி வருகின்றன என்பது நினைவு கூரத்தக்கது. காவல்துறை இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறது.

---

# வெளியான உண்மை



விஜயபாரதம்

அமெரிக்காவின் உயர்மட்ட ராணுவ அதிகாரியான ஜெனரல் மார்க் மில்லி, தற்போது ராணுவ கூட்டுத் தலைமைத் தலைவர்களின் தலைவராகவும், அமெரிக்க அதிபரின் முதன்மை ராணுவ ஆலோசகராகவும் உள்ளார். மேலும், ராணுவம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளராகவும் உள்ளார். இவர், முன்னாள் அமெரிக்க அதிபரான டிரம்பின் ஆட்சி காலத்தில், சீன ராணுவ ஜெனரல் லி சூசெங்கிடம் இரண்டு முறை தொலைபேசியில் பேசியுள்ளார். அப்போது அவர், அமெரிக்கா சீனா மீது எவ்வித தாக்குதலையும் நடத்தாது. அப்படி நடத்த முயன்றால் அதனை தான் முன்கூட்டியே தெரிவிப்பதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார். ட்ரம்ப் நிலையற்றவர் என்று மார்க் மில்லி நம்பினார். இந்த உரையாடலில் சீன ஜெனரலும் மார்க் மில்லியும் 5 வருடங்களாக ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்து நட்புடன் இருந்துள்ளனர் என தெரிய வருகிறது என்று பாப் உட்வார்ட் மற்றும் ராபர்ட் கோஸ்டா இருவரும் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் தெரிவித்துள்ளனர்.

# சரகாரி ராணுவ வீரர்களுக்கு மரியாதை



விஜயபாரதம்

செப்டம்பர் 12, 1897ல் ஆங்கிலேயர்கள் ஆட்சியில் இருந்த நமது பாரத ராணுவத்தின் சீக்கிய படைப்பிரிவின் வெறும் 21 வீரர்கள், அன்று, பாரதத்தின் ஒரு பகுதியாக இருந்த பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் சமனா பள்ளத்தாக்கில் 10 ஆயிரம் மூர்கமான ஆப்கானியர்களுக்கு எதிராக சரகாரி பகுதியில் வீரப்போர் புரிந்தனர். ஹவில்தார் இஷார் சிங் தலைமையில் புறக்காவல் நிலையத்தின் பாதுகாப்பு பணியில் இருந்த அந்த வீரர்கள் சரணடைவதை விட போர் புரிந்து மரணத்தை தழுவுவதைத் தேர்ந்தெடுத்தனர். வீரப்போர் புரிந்து ஏராளமான ஆப்கானியர்களை கொன்றனர்.

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 12ல் பாரத ராணுவத்தின் 4வது சீக்கிய படைப்பிரிவால் சரகாரி தினம் கொண்டாடப்படுகிறது. இதனை நினைவுகூரும் விதமாக, இங்கிலாந்தின் வெட்னஸ் பீல்டில் உள்ள ஒரு குருத்வாராவில் ஹவில்தார் இஷார் சிங்கின் 10 அடி உயர வெண்கல சிலை அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு 1 லட்சம் யூரோக்கள் நிதி திரட்டி, சிலை செய்து கடந்த செப்டம்பர் 12ல் திறந்து வைக்கப்பட்டது. அதில் அனைத்து தியாகிகளின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், சரகாரி வீரர்களின் மூன்றாம் தலைமுறை சந்ததியினர், பிரிட்டிஷ் ராணுவ உறுப்பினர்கள், சரகாரி நிபுணர் டாக்டர் குருந்தர்பால் சிங் ஜோசன், சரகாரி திரைப்படத் தயாரிப்பாளரும் எழுத்தாளருமான கேப்டன் ஜெய் சிங் சோஹல், மாகாண கவுன்சிலர், நகர வீட்டுவசதி அமைச்சரவை உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தாய்லாந்தில் விநாயகர் சதுர்த்தி கோலாகலம்



விஜயபாரதம்

கொரோனாவை காரணம் காட்டி நமது தமிழகம், ஆந்திரா உள்ளிட்ட சில மாநிலங்கள்தான் விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட தடைகள் விதித்தன. ஆனால், அதே கொரோனா பிரச்சனைகள் உள்ள பல வெளிநாடுகளில் விநாயகர் சதுர்த்தி கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அவ்வகையில், தாய்லாந்து நாட்டில் உள்ள ரங்க்சிட் பல்கலைக்கழகம் தனது 3வது ஆர்.எஸ்.யு சர்வதேச விநாயகர் சதுர்த்தி விழாவை மிக சிறப்பாக, ஆடல், பாடல் நிகழ்ச்சிகளுடன் நடத்தியது. அங்குள்ள பாரதத் தூதரகத்தை பிரதிநிதி ஆஷிஸ் ராய் சௌத்ரி தனது மனைவியுடன் முக்கிய விருந்தினராக இந்த விழாவில் கலந்து கொண்டார். 3 நாட்களாக நடைபெற்ற இவ்விழாவில் தாய்லாந்தில் உள்ள பாரத சமூகத்தினர் உட்பட ஆயிரக் கணக்கானவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

# இசைப் பேரரசி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி



விஜயபாரதம்

'இசைப் பேரரசி' என அனைவராலும் புகழப்பட்ட எம்.எஸ் சுப்புலக்ஷ்மி புகழ்பெற்ற கர்நாடக இசை பாடகி. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், வங்காளம், ஹிந்தி, குஜராத்தி போன்ற பலமொழிகளில் பாடியுள்ளார். எம். எஸ். சுப்புலக்ஷ்மி, 1916 செப்டம்பர் 16ல் மதுரை மாவட்டத்தில் சுப்பிரமணி அய்யருக்கும், சண்முகவடிவு அம்மாளுக்கும் மகளாக ஒரு இசை ஆர்வம் மிக்க குடும்பத்தில் பிறந்தார்.

சிறுவயதிலிருந்தே சுப்புலக்ஷ்மிக்கு இசையில் அதிக ஆர்வம் இருந்தது. இசையில் அவரின் முதல் குரு அவரது தாயார்தான். பின்னர் புகழ்பெற்ற செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயரிடம் கர்நாடக சங்கீதமும், பண்டிட் நாராயணராவ் வியாசிடம் ஹிந்துஸ்தானி இசையையும் கற்றார். 1926ல் அவருடைய தாயாரின் வீணை இசையில் இவரின் பாடலும் இணைந்து முதல் இசைத்தட்டு வெளியானது. 1929ல் இவருடைய முதல் கச்சேரி "சென்னை மியூசிக் அகாடமியில்" அரங்கேறியது.

1966ல் ஐ.நா சபையில் உலக அமைதியை வலியுறுத்தி ராஜாஜி எழுதிய "மே தி லார்ட் ஃபார்கிவ் அவர் சின்ஸ்" என்ற ஆங்கிலப் பாடலை எம்.எஸ் சுப்புலக்ஷ்மி பாடி அனைவரின் பாராட்டையும் பெற்றார். 'வெங்கடேச சுப்ரபாதம்', 'ஆதிசங்கரரின் பஜகோவிந்தம்', 'ரங்கபுர விஹாரா' என்னும் கீர்த்தனை போன்றவை எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பாடிய சிறந்த பாடல்களில் சில.

1938ல் சேவாசதனம் என்னும் திரைப்படத்தில் முதன் முதலில் அறிமுகமான எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, பின்னர், சகுந்தலை, சாவித்திரி, மீரா உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். மீராவில் இவர் பாடிய காற்றினிலே வரும் கீதம், பிருந்தாவனத்தில் கண்ணன், கிரிதர கோபாலா போன்ற பாடல்கள் கேட்பவர்களை உருக வைத்தது.

எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, கல்கி சதாசிவத்தை 1940ல் திருமணம் செய்து கொண்டார். சதாசிவம் இலக்கியம், இசை போன்றவற்றில் பிரியராக மட்டுமல்லாமல், இசைக் கற்றவராகாவும் இருந்தார்.

பாரதத்தின் மிக உயரிய விருதுகளான பாரத ரத்னா, பத்ம பூஷன், பத்ம விபூஷன் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார் எம்.எஸ். 1997ல் கணவர் மரணம் அடைந்தபிறகு கச்சேரிகள் செய்வதை நிறுத்திக்கொண்ட 2004ல் தன்னுடைய 88வது வயதில் மரணம் அடைந்தார். தான் பாடி ஈட்டிய பெரும் செல்வத்தை தானமாக ஆன்மீக நற்பணிகளுக்கும், சமூக சேவைக்கும் கொடுத்த மாபெரும் இசைக் கலைஞர் எம்.எஸ். சுப்புலக்ஷ்மி.

# வலையில் சிக்கிய மீம்கள்


கோவையை சேர்ந்த
ஓட்டல் காவலாளியின் மகள் 'நீட்' தேர்வில் வெற்றி




கேரளாவில்,கிருஷ்ண ஜெயந்தி அன்று தன் குழந்தைக்கு கிருஷ்ணர் வேடமிட்ட 'பேகம் ஷா' என்ற இஸ்லாமிய சகோதரியை ஆபாசமாக விமர்சித்த உள்ளூர் ஜமாத்திற்கு கண்ணியமாக பதிலளித்த சகோதரி....

கிருஷ்ணர் வேடமிட்டது , தவறு என்றால் அன்று சபரிமலை பெண்கள் நுழைவு போராட்டத்திற்கு ஆதரவு தந்து இஸ்லாமிய பெண்கள் மனித சங்கிலி நடத்தியதும் தவறு தானே?,,, சபரிமலைக்கும் பர்தா போட்ட இஸ்லாமிய பெண்களுக்கும் என்ன சம்மந்தம்? கிருஷ்ணர் வேடமிட்டது என் குழந்தையின் விருப்பம், அதை நானே தடுக்காத போது கேள்வி கேட்க நீங்கள் யார்?

வாழ்த்துக்கள் சகோதரி.

